

குன்றத்தூரில் சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கரின் திருவுருவச் சிலையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். இதில் கழகப் பொருளாளரும், மக்களவைக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் தா.மோ. அன்பரசன், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வபெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், க.செல்வம் எம்.பி., மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.9.2025) முகாம் அலுவலகத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, அண்ணா அறிவாலய மேலாளர் ஆர். பத்மநாபன் ஆகியோர் சந்தித்து, கரூரில் 17.9.2025 அன்று நடைபெறவுள்ள “திமுக முப்பெரும் விழா 2025”–க்கான அழைப்பிதழை வழங்கினார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.9.2025) சென்னையில் நடைபெற்ற மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் சகோதரர் ஆர்.சண்முகானந்தன் மகன் ஆர்தேஷ் ராமமூர்த்தி –சந்திரவர்ஷினி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பால் வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## இசை அரசனுக்கு மட்டுமல்ல –

# இசை ரசிகர்களுக்குமான பாராட்டு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை, செப்.12-

சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் 13.9.2025 அன்று மாலை திரையுலகில் பொன் விழா காணும் சிம்பொனி சிகரம் தொட்ட இசைஞானி இளையராஜா அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் பாராட்டு விழா நடைபெறவிருப்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**“ராஜாவைத் தாலாட்டும் தென்றல்” – நம் பாராட்டு விழா!**

**இது இசையின் அரசனுக்கு மட்டுமல்ல; அவரை வியக்கும் உலகில் உள்ள அத்தனை இசை இரசிகர்களுக்குமான பாராட்டு விழா!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



வேலூர் மாநகராட்சி மண்டலம் 4ல்சேண்பாக்கம் பகுதியில் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.








# தி.மு.க. இளைஞர் அணி

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 9–இல் சோழவந்தான், மதுரை வடக்கு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 13.09.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | சோழவந்தான் | ஜான்சி மஹால், வாடிப்பட்டி. |
| 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | மதுரை வடக்கு | ட்வின் மஹால், அண்ணாநகர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 10-09-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

# செப். 15 ல் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாட வேண்டும்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி தலைமையிலான செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நாமக்கல், செப். 12 –

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் திருச்செங்கோட்டில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் நடன சபாபதி தலைமையில் நடைபெற்றது.

சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள் சீனிவாசன் திருச்செங்கோடு, உமாமகேஸ்வரி (பரமத்தி), செல்வம் (குமாரபாளையம்), மாநில நிர்வாகிகள் வெப்படை செல்வராஜ், பரமானந்தம், ரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி கலந்துகொண்டு பேசுகையில், வரும் செப்டம்பர் 15 ஆம் தேதி நமது இயக்கத்தின் நிறுவனர் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை அனைத்து பகுதிகளிலும் உள்ள பொறுப்பாளர்கள் கொடியேற்றி அவரது திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டும்,

கரூரில் நடைபெற உள்ள முப்பெரும் விழா மாநாட்டில் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும். தொகுதி பொறுப்பாளர்கள் அறிவுறுத்தியபடி பிஎல் 2, பிஎல்சி உறுப்பினர்களுக்கான whatsapp குரூப்பில் அனைவரும் இணைந்தால் தான் மாவட்ட நிர்வாகம், தலைமை எடுக்கிற முடிவை உடனடியாக அறிந்து செயல்பட முடியும். அனைத்தையும் தலைமைக் கழகத்திலிருந்து கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்து செயல்படக் கூடாது. உடனடியாக பொறுப்பாளர்கள் தங்களை whatsapp குரூப்பில் இணைத்துக்கொள்ள வேண்டும் எனக் கூறினார்.